# பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி

# பிரதான தரவு ஆவணம்

# எல்லை வியாபாரம் (Margin Trading)

Version – 2024-01

## 1. பிரதான தரவு ஆவணம் - எல்லை வியாபாரம் (Margin Trading)

| கணக்கின் விளக்கம் | வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் | கட்டணங்கள்/ கூலிகள், தரகு, வட்டி | கணக்கை ஆரம்பிப்பதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் | பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் | சட்ட ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| **விளக்கம்:**<br>பங்குப் பரிவர்த்தனையில் முதலீடுகளை மேற்கொள்ளும் முதலீட்டாளர்களுக்கு தமது முதலீட்டின் மீது கடன் வசதியைப் பெற்று, அதனூடாக தமது இருப்பை கட்டியெழுப்பிக் கொள்ளவும், மேலதிக பங்குகளை விற்பனை செய்வதற்கும் வழியமைக்கும் தீர்வாகும்.<br><br>**நோக்கம்:**<br>வாடிக்கையாளர்களுக்கு தமது இருப்பை மேம்படுத்திக் கொள்ள உதவுவதுடன், அதே இருப்புடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடவும், அதனை பிணைமுறியாக கொண்டிருக்கவும் உதவுகின்றது. | - கணக்கு நிலை தொடர்பில் தினசரி பதிவேற்றங்கள்.<br>- பங்கு கொள்வனவு ஆற்றலில் உடனடி அதிகரிப்பு.<br>- அதிகரித்த பங்கிலாபங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல் இலாபம் போன்ற வருமானமீட்டும் வாய்ப்புகள்.<br>- ஏற்கனவே காணப்படும் பங்குகளை விற்பனை செய்யாமல் அல்லது சொந்த நிதியிலிருந்து மேலதிக மூலதன முதலீட்டை மேற்கொள்ளாமல், சந்தையில் நிலவும் புதிய முதலீட்டு வாய்ப்புகளை அணுகல்.<br>- எந்தவொரு பதிவு செய்யப்பட்ட முகவரினூடாகவும் வசதி வழங்கப்படும்.<br>- ஆகக்குறைந்த ஆவணப்படுத்தல் மற்றும் துரித அனுமதி.<br>- தினசரி மீதியின் மீது வட்டி கணிப்பிடப்பட்டு, மாத இறுதியில் கணக்கில் பற்று வைக்கப்படும். | - பிரிவின் அளவு மற்றும் பங்குகளின் தரத்தின் பிரகாரம் வட்டி வீதங்கள்.<br><br>- அனுமதியைப் பெறுவதற்கு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கான கட்டணங்கள்.<br><br>- மாதாந்த அடிப்படையில் வட்டி அறவிடப்படல். | **தனிநபர் ஒருவருக்கு எல்லை வியாபார கணக்கொன்றை ஆரம்பிக்க தேவையான ஆவணங்கள்:**<br><br>1. எல்லை வியாபார கணக்கு ஆரம்பிப்பு விண்ணப்பப்படிவத்துடன் வாடிக்கையாளர் இனங்காணல் படிவம் (CDD) பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பமிடப்பட்டிருத்தல்.<br>2. வாடிக்கையாளர், எல்லை வழங்குநர் மற்றும் பங்குமுகவர் நிறுவனம் ஆகிய தரப்பால் ஒப்பமிடப்பட்ட எல்லை வியாபார உடன்படிக்கை.<br>3. தனியார் மாற்ற படிவம் ஒப்பமிடப்பட வேண்டும்.<br>4. வாடிக்கையாளரால் ஒப்பமிடப்பட்ட கணக்குகளுக்கிடையிலான மாற்றல் படிவம்.<br>5. தேசிய அடையாள அட்டை/செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி<br>6. தேசிய அடையாள அட்டையிலுள்ள முகவரியிலிருந்து வழங்கப்பட்ட முகவரி வேறுபட்டால், கட்டணப்பட்டியல் பிரதி, வங்கிக்கூற்று அல்லது CDS கூற்று (நிரந்தர முகவரியை உறுதி செய்ய)<br>7. உறுதியளிப்பு கடிதம் ஒப்பமிடப்பட வேண்டும்.<br><br>**கூட்டாண்மை வாடிக்கையாளருக்கு எல்லை வியாபார கணக்கொன்றை ஆரம்பிக்க தேவையான ஆவணங்கள்:**<br><br>1. கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கான எல்லை வியாபார கணக்கு ஆரம்பிப்பு விண்ணப்பப்படிவத்துடன் வாடிக்கையாளர் இனங்காணல் படிவம் (CDD) பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பமிடப்பட்டிருத்தல்.<br>2. கூட்டாண்மை வாடிக்கையாளர், எல்லை வழங்குநர் மற்றும் பங்குமுகவர் நிறுவனம் ஆகிய தரப்பால் ஒப்பமிடப்பட்ட எல்லை வியாபார உடன்படிக்கை.<br>3. நிறுவன பணிப்பாளர் சபை தீர்மானம்.<br>4. ஸ்தாபிப்பு சான்றிதழ்<br>5. படிவம் 20 (பணிப்பாளர்கள் மற்றும் செயலாளர்களின் விவரங்கள்) | தகைமை:<br>**தனிநபர்**<br>18 வயதுக்கு மேற்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டை கொண்டிருக்கும் இலங்கை பிரஜை அல்லது வதிவிட வீசா கொண்டிருப்பவர்.<br><br>**கூட்டாண்மை மற்றும் இதர நிறுவனங்கள்**<br>இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கூட்டாண்மை மற்றும் இதர நிறுவனங்கள் | இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் சட்ட இல. 19 இன் பிரகாரம், பிரிவு 183 இன் கீழ், எல்லை வழங்குநர் ஆக பதிவு செய்யப்பட்டிருத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 6. சங்க அமைப்பு விதிகள்<br>7. நிறுவன கடித தலைப்பில் காணப்படும் சகல பணிப்பாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள்.<br>8. சகல பணிப்பாளர்களின் தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு பிரதிகள்.<br>9. நிறுவனத்தின் கடித தலைப்பில் முதல் பத்து பங்குதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள்.<br>10. தனியார் மாற்ற படிவம் ஒப்பமிடப்பட வேண்டும்.<br>11. கணக்குகளுக்கிடையிலான மாற்றல் படிவம் ஒப்பமிடப்பட வேண்டும். | | |

*** வாடிக்கையாளர் முறைப்பாடு கையாளல் விதிமுறைக்கு, ஆவணத்தின் இறுதிப் பக்கத்தைப் பார்க்கவும்.

## முறைப்பாடு கையாளல் விதிமுறை:

**வாடிக்கையாளர்களுக்கு முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கு** பின்வரும் முறைகள் காணப்படுகின்றன.

- எல்லை வியாபார பிரிவின் பிரதம முகாமையாளர் / முகாமையாளர் ஊடாக.
- அழைப்பு நிலையம் +94 11 2 206 300 ஊடாக
- எமக்கு மின்னஞ்சல் செய்வதனூடாக: customerservices@plc.lk
- தபால் மூலமாக – வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் பிணக்குத் தீர்த்தல் பிரிவு, 5ஆம் மாடி, இல. 1161, மருதானை வீதி, கொழும்பு 00800.

நிதிச்சேவைகளை வழங்கும் நிறுவனத்தினால் திருப்திகரத்தன்மையான தீர்வு வழங்கப்படாவிடின், இலங்கை **நிதிசார் குறைகேள்** அலுவலகத்துக்கு வாடிக்கையாளர் தமது முறைப்பாட்டை கொண்டு செல்லலாம்.

நிதிசார் குறைகேள் அதிகாரி,

நிதிசார் குறைகேள் அதிகாரி அலுவலகம்,

143A, வஜிர வீதி,

கொழும்பு 05.

தொலைபேசி: +94 11 259 5624

தொலைநகல்: +94 11 259 5625

மின்னஞ்சல்: fosril@sltnet.lk

இணையத்தளம்: www.financialombudsman.lk